සමාජය හා සාමයික කේන්ද්‍රය
சமூக சமய நடுநிலையம்
Centre for Society & Religion

281, Deans Road,
Colombo 10,
Sri Lanka.

Telephone : +94 0112 69 54 25 (General)
Fax : +94 0112 68 20 64
Web : www.csrsrilanka.org

## ஊடக வெளியீடு

## உயிர்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக் குழுவில் முன் வைக்கப்பட்ட மிக முக்கியமான 4 சாட்சிகள் CSR இற்கு கிடைத்தது; குண்டுதாரிகள் தொடர்பில் பாதுகாப்பு தரப்பு ஆரம்பம் முதல் அறிந்திருந்தமை மேலும் உறுதியானது

உயிர்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், அரச உளவுச் சேவையின் தற்போதைய பணிப்பாளர் துவான் சுரேஷ் சலே மற்றும் சஹ்ரானின் மனைவி பாத்திமா ஹாதியா ஆகியோர் வழங்கிய சாட்சியங்களின் பதிவு இலங்கை பாராளுமன்றத்தின் தகவல் அதிகாரி ஹங்ச அபேரத்னவினால் மருதானை CSR மையத்துக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை பாராளுமன்றத்தில் கடந்த 2023 செப்டம்பர் மாதம் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் மற்றும் செனல் 4 காணொளி தொடர்பில் நடந்த விவாதத்தின் இடையே, பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த சாட்சி பதிவுகளை சபைப்படுத்தியிருந்தனர். இந்த தகவல்களை கோரி சமூக மற்றும் அமைதிக்கான மையத்தின் ஆய்வுக் குழு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக முன் வைத்த தகவல் கோரிக்கைக்கு அமைய இந்த தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறு கிடைத்த தகவல்களை ஆய்வுக் குழுவொன்றூடாக வாசித்து, பகுப்பாய்வு செய்ததன் பின், அவற்றில் உள்ளடங்கும் மற்றும் அவற்றின் ஊடாக வெளிப்படுத்தப்படும் பின்வரும் விடயங்கள் பொது மக்கள் அறிந்துகொள்வதற்காக முன் வைப்பதற்கு சமூக மற்றும் அமைதிக்கான மையம் என்ற ரீதியில் நாம் தீர்மானித்தோம்.

1) துவான் சுரேஷ் சலே இலங்கை இராணுவத்தின் புலனாய்வு பணிப்பாளராக பணியாற்றிக்கொண்டிருந்த காலம் முதல் இராணுவ புலனாய்வுப் பிரிவிடம் சஹ்ரான் ஹஷீம் தொடர்பிலான தகவல்கள் இருந்துள்ளன.

கிழக்கு புலனாய்வு அதிகாரிகள் சஹ்ரான் ஹஷீம் தொடர்பில் தகவல்களை வழங்கியதாக துவான் சுரேஷ் சலே 2020 ஜூன் 25 ஆம் திகதி ஜனதிபதி ஆணைக் குழுவுக்கு வழங்கிய சாட்சியத்தில் சிரேஷ்ட அரச சட்டவாதி சஞ்ஜீவ திஸாநாயக்க தொடுத்த கேள்விகள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த சாட்சியத்தின் 94 மற்றும் 95 ஆவது பக்கங்களில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. தௌஹீத் ஜமா அத் குழுவொன்றுடன் அவர்கள் தொடர்புபட்டதாகவும் , அவர்களை பாதுகாப்பு அமைச்சுக்கு அழைத்து கலந்துரையாடல் நடாத்தியுள்ளதாகவும் அவர் அவரது சாட்சியத்தில் 113 ஆவது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். JMI அமைப்புக்குள் தமது இராணுவ புலனாய்வுப் பிரிவின் முகவர் ஒருவரை அனுப்பி தகவல்களைப் பெற்றுக்கொண்டதாகவும் அது மிக இரகசியமான நடவடிக்கை எனவும் அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2) சஹ்ரானின் பாதுகாப்பு தொடர்பில் ஆர்வமாக செயற்பட்ட இந்தியாவில் இருப்பதாக சந்தேகிக்கப்படும் அபூ ஹிந் எனும் நபர் சஹ்ரானுடன் கடந்த 2017 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியிலிருந்து உரையாட ஆரம்பித்துள்ளதாக சஹ்ரானின் மனைவி பாத்திமா ஹாதியா தமது சாட்சியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு அவர் கடந்த 2020 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி சாட்சியமளித்துள்ளார். 2017 இறுதி பகுதியிலிருந்து 2019 வரை அபூ ஹிந் எனும் பெயரில் இருந்த நபர் சஹ்ரானுடன் தொடர்ச்சியாக தொடர்பாடலை முன்னெடுத்திருந்ததாக ஹாதியாவின் சாட்சியத்தின் 76 ஆவது

பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல ஏப்ரல் 3 ஆம் திகதி பாணந்துறை மற்றும் கட்டுவாபிட்டிய வீடுகளுக்கு இடையே பொருட்களை ( குண்டு சார் பொருட்கள்) மாற்றும் நடவடிக்கை தொடர்பிலும் ஹாதியாவின் சாட்சியத்தில் 124 மற்றும் 125 ஆவது பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்டியில் நடந்த ஆயுத பயிற்சியின் இடையே பொலிஸார் வந்து பரிசீலனை செய்த போது சஹ்ரான் உள்ளிட்டவர்களிடம் ஆயுதங்கள் இருந்ததாகவும், சஹ்ரானின் பையை சோதனை செய்த போதும் பொலிசார் ஆயுதத்தை கண்டுபிடிக்கவில்லை என சஹ்ரான் தெரிவித்ததாகவும் ஹாதியா தனது சாட்சியத்தின் 150 ஆவது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். சாய்ந்தமருது சம்பவத்தில், வீடு நெருப்பெடுத்த போது வீட்டுக்கு வெளியாக வந்து சஹ்ரானின் சகோதரர் சைனி தன்னை அழைத்ததாகவும், தான் செல்லவில்லை எனவும், சில நிமிடங்களில் சூட்டுச் சப்தங்கள் கேட்டதாகவும், அச்சத்தத்தின் பின்னர் சாராவின் குரலை ஒத்த குரல் ஒன்று கேட்டதாகவும், தான் பின்னால் திரும்பி பார்த்த போது பெண் ஒருவர் நின்றுகொண்டிருந்ததாகவும் , அவரது முகத்தில் இரத்தம் தோய்ந்து இருந்ததாகவும் , உடை சற்று தீப்பற்றி இருந்ததாகவும் சஹ்ரானின் மனைவி தனது சாட்சியத்தின் 170 மற்றும் 171 ஆவது பக்கங்களில் குறிப்பிட்டுள்ளார், அந்த பெண்ணின் உருவ அமைப்பு சாராவை ஒத்தது என ஹாதியா குறிப்பிட்டுள்ளார்.

3) பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் 2017 முதல் சஹ்ரானின் பெயரை கேள்விப் பட்டுள்ளதாகவும், 2017 இல் நாலக சில்வா நடாத்திய செயலமர்வொன்றில் தான் கலந்துகொண்டதாகவும், அதில் மத அடிப்படைவாதம் தொடர்பில் குறிப்பிடும் போது சஹ்ரானின் பெயரும் குறிப்பிடப்பட்டதாக தேசபந்து தென்னகோன் ஒப்புக்கொண்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு முன்னர் கிடைத்த உளவுத் தகவல்கள், பொலிஸ் மா அதிபரால் கீழ் நிலையில் உள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பின்னர் மேல் மாகாணத்துக்கு பொறுப்பாக அப்போது இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், தான் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அது தொடர்பில் செயற்பட எழுத்து மூலம் ஆலோசனை வழங்கியதாகவும், அந்த

ஆலோசனைகளை சரியாக பின் பற்றி இருந்தால் கட்டுவாபிட்டிய தேவாலயம் மீதான தாக்குதலை தடுத்திருக்க வாய்ப்பிருந்ததாக தான் ஏற்றுக்கொள்வதாகவும் தேசபந்து தென்னகோன் தனது சாட்சியத்தின் 78, 79 ஆம் பக்கங்களில் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட ஆவணங்களை தான் தனக்கு கீழிருந்த அதிகாரிகளுக்கு அனுப்பியதாகவும், ஏப்ரல் 18 ஆம் திகதி கடமையை முடித்துவிட்டு தான் விடுமுறையில் சென்றதாகவும், குண்டு வெடிக்கும் போது தான் மஹியங்கனை பகுதியில் இருந்ததாகவும் தென்னகோன் குறிப்பிட்டுள்ளார். கத்தோலிக்க தேவாலயங்கள் மீது தாக்குதல் நடாத்தப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தமையால் கத்தோலிக்க, கிறிஸ்தவ மதகுருமாரை இது தொடர்பில் தெளிவுபடுத்தினீரா என நீதிபதிகள் தேசபந்து தென்னகோனிடம் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், அவ்வாறு எதுவும் செய்யவில்லை என அவர் பதிலளித்துள்ளார்.

விரைவில் கத்தோலிக்க தேவாலயங்கள் மீது தாக்குதல் நடாத்தப்படும் என தகவல் இருக்கையில், உயிர்த்த ஞாயிறு தினம் என்பது அண்மித்த விஷேட தினம் என்ற சாதாரண அறிவு இருக்கும் நிலையில், விடுமுறையில் செல்ல முன்னர் தமது பாதுகாப்பு கட்டமைப்பு தொடர்பில் பதில் கடமைகளை செய்யும் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனை வழங்கினீரா என ஆணைக் குழு கேள்வி எழுப்பிய போது அவ்வாறு செய்யவில்லை என தேசபந்து தென்னகோன் பதிலளித்துள்ளார்.

மேற்சொன்ன விடயங்கள், சாட்சிகளை அவதானமாக ஆராயும் போது, சஹ்ரான் மட்டுமல்லாமல், கொழும்பை மையப்படுத்தி செயற்பட்ட இப்ராஹீமின் புதல்வர்களின் அமைப்பான ஜே.எம்.ஐ. தொடர்பிலும் புலனாய்வு பிரிவு நீண்டகாலமாக அறிந்திருந்தமை புலனாகிறது.

கிடைக்கப் பெற்றுள்ள சாட்சியங்களுக்கு அமைய, மிகவும் குறைந்தளவானோர் உறுப்பினர்களாக இருந்த ஜே.எம்.ஐ. அமைப்புக்குள் இராணுவ புலனாய்வுப் பிரிவின் முகவர் ஒருவர் உள் நுழைவிக்கப்பட்டிருந்த பின்னணியில், குண்டுத் தாக்குதல் தொடர்பிலான தகவல்களைப் பெற்று அதனை தடுக்க முடியாமல் போனமை மிகவும் ஆச்சரியமான விடயமாகும்.

பாதுகாப்பு அமைச்சுக்கு தௌஹீத் ஜமாஅத் பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடி, அவர்களின் நடமாட்டம் தொடர்பில் தொடர்ச்சியாக அவதானத்துடன் இருந்த புலனாய்வுப் பிரிவு குண்டுத் தாக்குதலை தடுக்காமல் இருந்தமையானது யாரின் அழுத்தத்தினால் நடந்தது, அதன் பின்னணியில் இருப்பது யார் என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

சஹ்ரானின் மனைவியின் சாட்சியத்துக்கு அமைய, ஏப்ரல் 3 ஆம் திகதி பாணந்துரை வீடு மற்றும் கட்டுவாபிட்டிய வீட்டுக்கு இடையே பொருள் பறிமாற்றம் நடந்துள்ளது. கெலனிகமவில் சட்டத்துக்கு முரணான உத்தரவொன்றுக்கு அமைய விடுவிக்கப்பட்டதாக இலங்கை பாராளுமன்றத்தில் குறிப்பிடப்பட்ட லொறி, அவ்வாறு விடுவிக்கப்பட்டதும் ஏப்ரல் 3 ஆம் திகதி என கூறப்படுகின்றது. தேசபந்து தென்னகோன் அதிகார எல்லைக்குள் இருந்த கட்டுவாபிட்டிய வீடு மற்றும் அவரின் அதிகார எல்லைக்கு அப்பால் இருந்த பாணந்துறை வீட்டுக்கு இடையே பொருள் பறிமாற்றம் நடக்கும் போது, அவரது அதிகார எல்லைக்கு அப்பால்பட்ட கெலனிகம பொலிஸாருக்கு கதைத்து லொறி தொடர்பில் ஆலோசனை வழங்கியமை, ஏப்ரல் 19 முதல் சில தினங்களுக்கு தொடர்ச்சியாக விடுமுறை எடுக்க ஏப்ரல் 3 ஆம் திகதியே விண்ணப்பம் செய்தமை ஆகிய விடயங்களுக்கு இடையிலான தொடர்பு குறித்தும் இதுவரை முறையான விசாரணைகள் இடம்பெறவில்லை.

பாத்திமா ஹாதியாவின் சாட்சிகளின் பிரகாரம், சஹ்ரானின் சகோதரர் சைனி மற்றும் சாரா ஆகியோர் சாய்ந்தமருது குண்டு வெடிப்பின் பின்னரும் உயிருடன் இருந்துள்ளனர். வெடிப்பின் பின்னர் சைனி தன்னை அழைத்ததாகவும் அதன் பின்னர் மீளவும் சூட்டுச் சப்தங்கள் கேட்டதாகவும் ஹாதியாவின் சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த இடத்திலிருந்து சைனியின் சடலம் கிடைத்த போதும் சாராவின் சடலம் கிடைக்கவில்லை. வீட்டுக்குள் நடந்த வெடிப்பின் பின்னர் சைனி உயிருடன் இருந்தமை, அதன் பின்னர் துப்பாக்கிச் சூடு நடந்தமை, உயிருடன் இருந்த சாரா காணாமல் போனமை ஆகிய சம்பவங்கள் ஊடாக, குண்டுத் தாக்குதல்தாரிகளின் மிலேச்சத்தனத்தை மிஞ்சிய சதி ஒன்று இருந்துள்ளமை

புலனாகிறது. இவை தொடர்பில் இதுவரை முறையான விசாரணைகள் இடம்பெறவில்லை.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் ஏனைய சாட்சிகள் மற்றும் கோப்புகளை வெளிப்படுத்தாமல் இருப்பது, இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ள சதி வெளிச்சத்துக்கு வரும் என்பதனாலேயே என கூறுவதற்கு, இந்த சில சாட்சிகள் ஊடாக வெளிப்படும் விடயங்கள் போதுமானவையாகும்.

தேசிய பாதுகாப்பு என்பது ஆட்சியாளர்களின் பாதுகாப்பு மட்டுமன்றி, பொது மக்களின் பாதுகாப்பாகும். பொது மக்களின் பாதுகாப்புக்கு மிகப் பாரதூரமான குந்தகம் விளைவிக்கப்பட்டுள்ள நிலையில் இன்னும் உரிய விசாரணைகளை முன்னெடுக்காது இந்த தகவல்களை ஒளித்து வைத்துக்கொள்ள முயற்சிப்பதன் ஊடாக மேலும் ஆட்சியாளர்கள் பொது மக்களின் பாதுகாப்பை அனர்த்தத்துக்குள் வைத்துள்ளார்கள் என்பதை நாம் குறிப்பிட விரும்புகின்றோம்.

அதனால், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பிலான அனைத்து தகவல்களையும் வெளியிடுமாறும், இது தொடர்பில் நியாயமான சர்வதேச விசாரணைக்கு வாய்ப்பளிக்குமாறும் நாம் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கின்றோம்.

**சமூக மற்றும் அமைதிக்கான மையம்**

2024 ஜனவரி மாதம் 19 ஆம் திகதி